Inspector of Police
Vigilance and Anti-Corruption
Tiruvannamalai

# Under Section 173 BNSS

## FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074748

C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2025** FIR No.: மு.த.அ. எண் **01/2025** Date: நாள் **08.01.2025**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **07.01.2025** Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **08.01.2025** Time நேரம் : **08.00 Hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time நேரம் : **09.00 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **25 Kms North west**
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address முகவரி **Primary Health Centre, Karappattu Village, Chengam Taluk, Tiruvannamalai District**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.S.Naveenraj**
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o. Sundaramoorthy**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-31**
   (d) Nationality : நாட்டினம் **Indian**
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **E-Sevai Maiyam**
   (g) Address : முகவரி **No.1/59, Main Road, Natchatra Koil, Vilvarani Post, Kalasapakkm Taluk, Tiruvannamalai District-606906**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   **Tr.Arun, Dental Assistant, Karappattu Primary Health Centre, Chengam Taluk, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) ------

10. Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : ------
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது

திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 08.01.2025 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் சு.நவீன்ராஜ், வயது.31 த/பெ சுந்தரமூர்த்தி, நெ.1/59, மெயின் ரோடு, நட்சத்திரக்கோயில் கிராமம், வில்வாரணி அஞ்சல், கலசபாக்கம் வட்டம்-606906 Cell : 96554 03004 என்பவர் நேரில் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார் மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு நாள் : 08.01.2025 விடுநர் சு.நவீன்ராஜ்,வயது..31 த/பெ சுந்தரமூர்த்தி, நெ.1/59, மெயின் ரோடு, நட்சத்திரக்கோயில் கிராமம், வில்வாரணி அஞ்சல், கலசபாக்கம் வட்டம்- 606906 Cell : 96554 03004 பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் என் மனைவி ஜெயந்தி மற்றும் 8 மாத குழந்தையுடன் வசித்து வருகிறேன். நான் நட்சத்திரக்கோயில் கிராமத்தில் வீட்டிலேயே E- சேவை மையம் வைத்து நடத்தி வருகிறேன். என் மனைவி

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S.N [signature] 08/01/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08/01/2024
10.00 Hrs

Name: பெயர் R. Arulrasan
Rank: நிலை Inspr of Police No. எண் ..........

ஜெயந்தி கடந்த 17.06.2023 முதல் செய்யாறு சுகாதாரத்துறை மாவட்டம் வந்தவாசி வருவாய் வட்டம் வழூர் சுகாதார வட்டத்தில் கொவளை ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொகுப்பு ஊதிய அடிப்படையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார். குடும்ப சூழ்நிலை காரணமாக திருவண்ணாமலை சுகாதார மாவட்டத்திற்கு அவருக்கு பணியிட மாறுதல் வேண்டியும் தடையில்லா சான்று கோரியும் கடந்த 11.11.2024 ஆம் தேதி செய்யாறு சுகாதார மாவட்ட துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அலுவலகத்தில் மனு அளித்திருந்தேன். இதுசம்மந்தமாக கடந்த 21.12.2024 ஆம் தேதி செய்யாறு துணை இயக்குநர் அலுவலகத்தில் சென்று விசாரித்த போது, பணி மாறுதல் சம்மந்தமாக தடையில்லா சான்று திருவண்ணாமலை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டதாக கூறினார்கள். அதன் பிறகு நானும் என் மனைவி ஜெயந்தியும் திருவண்ணாமலை சுகாதார மாவட்டம் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு கடந்த 30.12.2024 ஆம் தேதி சென்று துணை இயக்குநர் அவர்களை விசாரித்த போது பணியிட மாறுதல் உத்தரவு வழங்குவதாக உறுதியளித்தார். அன்றைய தினமே திருவண்ணாமலை துணை இயக்குநர் அலுவலகத்தில் இருந்த Assistant Project Manager (APM) திரு.விஜயரமணன் அவர்களை விசாரித்தோம். அவரும் பணியிட மாறுதல் உத்தரவு கையெழுத்து ஆனதும் சொல்கிறேன் என சொன்னார். இந்நிலையில் காரப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் திரு.அருண் டெண்டல் அசிஸ்டெண்ட் என்பவர் கடந்த 04.01.2025 தேதி காலை 1100 மணிக்கு தன்னுடைய செல்போன் எண்.9786901626-இல் இருந்து என்னுடைய மனைவி ஜெயந்தியின் செல்போன் எண்.8111046998 எண்ணிற்கு தொடர்பு கொண்டு பணியிட மாறுதல் சம்மந்தமதாக விசாரித்தார். பின்னர் பணியமாறுதல் சம்மந்தமான உத்தரவு எல்லாம் பேமெண்ட் தான் உங்க கணவரை காரப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து என்னை நேரில் பார்க்கச் சொல்லவும் என்று கூறினார். அதன்படி நான் 07.01.2025 ஆம் தேதி காரப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம் சென்று டெண்டல் அசிஸ்டெண்ட் திரு.அருண் என்பவரிடம் எனது மனைவியின் பணிமாறுதல் சம்மந்தமாக சந்தித்து பேசினேன். திரு.அருண் என்பவர் தான் காரப்பட்டு PH-ல் டெண்டல் அசிஸ்டெண்ட்டாக பணிபுரிவதாகவும், ஜெயந்தி பணிமாறுதல் சம்மந்தமான பணியிடம் திருச்சூர்பேட்டை PH-க்கு உத்தரவு போடப்பட்டிருப்பதாகவும் அதன் உத்தரவு ஆணை வேண்டுமென்றால் மேல் அதிகாரிகளுக்கு ரூ.80,000/- இலஞ்சமாக தர வேண்டும் என்றும் எல்லாருக்கும் அதே தொகைதான் என்றும் என் மனைவி ஜெயந்தி மகப்பேறு விடுப்பில் உள்ளதால் ரூ.10,000/- குறைத்து ரூ.70,000/- இலஞ்சமாக தர வேண்டும் என்றார். நான் அவரிடம் மேலும் குறைத்துச் சொல்லுங்கள் என்று கேட்டதற்கு, அதற்கு அவர் உங்களுக்கு பணியிட மாறுதல் உத்தரவு கொடுத்து விடுகிறேன் கேட்டப்பணத்தை கொடுக்கவில்லை என்றால் வேறு யாருக்காவது திருச்சூர்பேட்டை பணியிடத்திற்கு மாறுதல் உத்தரவு வழங்கி விடுவார்கள் என்று திட்டவட்டமாக கூறினார். மேலும் அவர் முதல் தவணையாக ரூ.20,000/- மட்டும் இலஞ்சமாக கொடுங்கள் மீதி தொகையை பிறகு

கொடுங்கள் என்று கூறினார். எனக்கு பணியிட மாறுதலில் இலஞ்சமாக பணம் ரூ.20,000/- (முதல் தவணையாக) கொடுப்பதற்கு விருப்பமில்லாததால் இந்த புகார் மனு அளிக்கிறேன். எனவே என்னுடைய மனைவி ஜெயந்தியின் பணியிடமாறுதல் உத்தரவு வழங்க என்னிடம் இலஞ்சமாக பணம் கேட்ட டெண்டல் அசிஸ்டெண்ட் திரு.அருண் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினியில் டைப் செய்த மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். எனவே உரிய நபர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (SdXXXXX) S.Naveenraj 08/01/2025.

**Sir,**

Received the complaint on 08.01.2025 at 08.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also quickly verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 08.01.2025 at 09.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.02/2025 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 08/01/2025. R.Arulprasad, Inspector of Police, V&AC, Tiruvannamalai.

08.01.2025

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Tiruvannamalai